# வெற்றிடங்கள்

## இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)

SRI LANKA STANDARDS INSTITUTION
GUARDIAN OF QUALITY

## விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு

### தொழில்நுட்ப அதிகாரி - கனிஷ்ட முகாமைத்துவப் பிரிவு (JM 1-2 தரம் II)

### தொழில்நுட்ப அதிகாரி பதவி – 07 பதவிகள்

**தகைமைகள்**

**வெளிவாரி (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

**கல்வி :**

1) இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல், தொழில்நுட்பம் அல்லது விஞ்ஞானப் பிரிவில் இளமாணிப் பட்டம்.

   (விஞ்ஞானப் பிரிவு - பின்வரும் பாடங்களில் ஒன்றை வழங்குகிறது)

   பௌதீகவியல், இரசாயனவியல், உணவு விஞ்ஞானம், புடைவை, நுண்ணுயிரியல், சுற்றாடல் விஞ்ஞானம், மீன்பிடி, கமத்தொழில், உயிரியல், உயிரியல் தொழில்நுட்பம், மூலக்கூறு உயிரியல், கணிதம் அல்லது புள்ளிவிபரவியல்)

2) தொடர்புடைய துறையில் மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் கல்வி தகுதியில் 7ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

3) தொடர்புடைய துறையில் மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் கல்வி தகுதியில் 6ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு புகழ்பெற்ற நியதிகள் சபை நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னரான 05 ஆண்டுகள் அனுபவம்.

4) தொடர்புடைய துறையில் மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம்/ தொழிற்பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் கல்வி தகுதியில் 5ஆம் நிலைக்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருக்க வேண்டும்.

**மற்றும்**

கூட்டுத்தாபனம், சபை அல்லது ஒரு புகழ்பெற்ற நியதிகள் சபை நிறுவனமொன்றில் தொடர்புடைய துறையில் தகைமைக்குப் பின்னரான 10 ஆண்டுகள் அனுபவம்.

**உள்வாரி (பின்வரும் 1 அல்லது 2)**

1) மேலே உள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும்.
2) முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) MA 2-2 தரம் II பதவிக்கு பொருத்தமான பாடப்பிரிவில் குறைந்தபட்சம் 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

**தெரிவு முறை**

எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் ஊடாக

இந்தப் பரீட்சை கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடப் பிரிவுகளை உள்ளடக்கிய நான்கு பகுதிகளைக் கொண்ட ஒரு வினாத் தாளாக (3 மணி நேரம்) இருக்கும்.

- ஆங்கில மொழிப் புலமை
- தகுதிகாண் பரீட்சை
- பதவிக்கு பொருத்தமான பாட அறிவு
- கணனி கல்வியறிவு

**சம்பள அளவு :** இல. ரூபா 74,010.00 – 10 x 1,360.00 – இல. ரூபா 87,610.00

### முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1-2 - தரம் III)

### முகாமைத்துவ உதவியாளர் பதவி – 36 பதவிகள்

**தகுதிகள்**

**வெளிவாரி**

**கல்வி :**

1) க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
   i. சிங்களம்/ தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்

**மற்றும்**

1) க.பொ.த (உ/த) பரீட்சையில் பொது அறிவு வினாப்பத்திரம் மற்றும் ஆங்கில வினாப்பத்திரம் தவிர ஏனைய பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்கவேண்டும்.

**உள்வாரி**

பின்வரும் தகுதிகளில் தேர்ச்சிபெற்ற ஆரம்ப நிலை - திறமையான, அரை-திறமையான மற்றும் திறமையற்ற பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள்.

1) க.பொ.த. (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.
   i. சிங்களம்/ தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்

**மற்றும்**

2) ஆரம்ப நிலை - ஆரம்ப நிலை - திறமையான, அரை-திறமையான மற்றும் திறமையற்ற பிரிவுகளில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சேவைக் காலத்தை நிறைவு செய்திருக்க வேண்டும். மேலும், மேற்கூறிய ஊழியர் பிரிவின் கீழ் நிரந்தரப் பதவியில் திருப்திகரமான சேவையைப் பெற்றிருக்க வேண்டும்.

**தெரிவு முறை**

எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகத் தேர்வின் ஊடாக

இந்தப் பரீட்சை கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடப் பிரிவுகளை உள்ளடக்கிய மூன்று பகுதிகளைக் கொண்ட ஒரு வினாத் தாளாக (3 மணி நேரம்) இருக்கும்.

- ஆங்கில மொழிப் புலமை
- தகுதிகாண் பரீட்சை/ பொது அறிவு
- கணனி கல்வியறிவு

**சம்பள அளவு :** இல. ரூபா 46,220.00 – 10 x 540.00 – இல. ரூபா 51,620.00

**ஏனையவை**

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்,**

- இலங்கைப் பிரஜையாக இருக்கவேண்டும்.
- பதவிக்குரித்தான கடமைகளை செவ்வனே நிறைவேற்றத்தக்க உடல் மற்றும் உள ரீதியான தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை உடையவராக இருக்க வேண்டும்.

**வயது :** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஏனைய நன்மைகள்**

1 பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறையை பணமாக்குதல்
2 ஆயுள் காப்புறுதித் திட்டம் மற்றும் மருத்துவ காப்புறுதித் திட்டம்
3 வரையரைக்குட்பட்ட மருத்துவ செலவுகளை திருப்பிச் செலுத்துதல்
4 பொதுத் திறைசேரியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வருடாந்த ஊக்குவிப்புத் தொகை
5 தொழில்சார் சூழல் ஒன்றில் பணி புரியும் வாய்ப்பு
6 தொடர்பாடல் கொடுப்பனவு (தொழில்நுட்ப அதிகாரிகளுக்கு மட்டும்)

முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்
இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)
https://forms.gle/ocdjpfkwv9oPPp137
SLSI MA

தொழில்நுட்ப அதிகாரி பதவிக்கான விண்ணப்பம்
இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI)
https://forms.gle/G7JK4iyMMySTi3KN6
SLSI TO

விண்ணப்பதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பு அல்லது QR குறியீடு வழியாகக் கிடைக்கும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்ய வேண்டும். பூர்த்தி செய்தவுடன், படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, விண்ணப்பதாரரால் முறையாகக் கையொப்பமிடப்பட்டு, அதே இணைப்பு அல்லது QR குறியீடு வழியாக மென் நகலைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்தின் வன் பிரதியொன்றை 2025-06-18ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் நாயகம், இலங்கை கட்டளைகள் நிறுவனம், இல. 17, விக்டோரியா பிளேஸ், எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு-08 என்ற முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களைப் பொருத்து பரீட்சைக் கட்டணம் மாறுபடலாம் என்பதுடன் அது பின்னர் அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணம் செலுத்திய பின்னர் மட்டுமே விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பப்படும்.

அரச துறை நிறுவனங்களில் பணியாற்றுபவர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக தமது விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்**

**தொலைபேசி : 011-2671567-72**
**011-2019600**